மன்னமன்னனும்பாலனென்று மதிப்பில்லாமலே
தனக்கொரு எதிர்ப்பில்லாமலே மடக்கிமகளை அடக்கி
சிறையில்மகிழ்ச்சிக் கொண்டானே
சத்தம்கேட்டவுடனே மகளைவிட்டாலாச்சுது
அவன் தலைபட்டாஸ் போச்சுது
தங்கள்தளங்களையெல்லாம் இடித்துசெங்கையிலெழுப்பேன்
கொடியப்பாவி துரியனென்று
யாருமறிந்திட இந்த உலகோரும் தெரிந்திட
அவநடத்தையே காட்டுவாரோ நல்லதாகட்டும்

துரியோதிரன் விருத்தம்

கடுங்கோபமுடனே பலபத்திராமன்
கண்டுமிகதிரியனிட சமுகமேக
அடங்காதமகிட்சியுடன் திரியபூபன்
யன்புடனே தானெழுந்து எதிரேயோடி
நெடுங்காலமாச்சுது நீயிங்கேவந்து
நேர்மையுடன்மாமா நீவாருமென்று
வணங்கார்முடிபடைத்த மன்னன்தானும்
மலர்பாதமதனில் வணங்கியுரைக்கின்றானே.

வ - ம். இந்தப்பிரகாரமாக துரியன்பூபன் பலராமனை வணங்கிசொல்லுகிற விதம்காண்க.

துரியன் தரு தர்க்கம்

மாமா வந்தனம்உந்தன் பாதமேசரணம்
மணமேகணமேதங்கள் இனமெல்லாம்சுகமோ
நேமமாவாதகைஉண்மையா சொல்லும்பெரிய
நீதியேதியஉந்தண்மை யரைச்சொல்லும்பெரிய மாமா

பலராமர் தரு

காமசுந்தரனேவாழிகறமோ உறமோசிறைவைக்கதிறமோ
நாமாறுநீயாறுபாரும நலமும்பிலமோ
கொள்ளுங்குலம் வேறுகூறும் காமசுந்தி

துரியன் தரு

அரிதான ஒருமகளாச்சே அடவேபடவேதுயர்குலம்போச்சே
சரிதானு உமக்கிதுபாரும் வீரமசதமோமதமோ
யிந்தவிதம் செய்யக்கூறும் அரிதான

பலராமர் தரு

தெரியாதசிறுபிள்ளையாகும் யவனைதிடமாஅடமா
சிறையிடகேடுனேறும் பரிவாகஅவனைநீவிடுவாஅந்தப்படியே
நடவாவிட்டால்குலம்கெட்டுப் போவாய் தெரியா

துரியோதிரன் விருத்தம்

எங்கள்குலம்தன்னிலே தரிப்பதென்ன
எதிர்குலத்திற் குந்திதன்னை கொண்டபின்பு

தூரியன் தரு

இவனுக்காக பரிந்துசண்டைக்கி
எவர்சகாவாகவந்தாலும் தேவர்எதிர்த்துநின்றாலும்
இளப்பமாகி நான்விடுவனோ
இதையறிந்தமட்டும் யினிவகைவிடுவீர்
நட்டும்யேகவேநடம் போகவேசொன்னே இவனுக்

பலராமர் விருத்தம்

தம்பியுஞ்சுதர்மனென்று சபையினிற்பாரிசாதம்
யின்பமாயனுபவித்து இருனிலமவனுங்கவர்ந்த
தெம்மையும்அறிந்திடாமல் சிறைவிடமாட்டேனென்று
வம்பனேயிதினுனக்கு வருங்கெதியறிகிலேனே.

வசனம

கேளும் தூரியோதனு சுதர்மனென்றும் சபையிலிருந்து திருப்பாற்கடலில் விருந்த பாரிசாத கற்பகத்தருவையும் பூமியிலே கொண்டுவந்து யனுபவித்திருக்கிறோம் அதுவுமல்லாமல் ஆகாயம் பூமியுள்ள மகாத்துமாக்கள் வணங்கும்படியான திருவடியையுடைய தேவதாயோக்கியம் பெற்றிருக்கும் என்தம்பியாகிய கிருஷ்ணனையும் பாரமல் போனபடியினாலே வரும்கெதியை அனுபவியும் திரியோதனமகாராசனே நான்போய் வருகிறேன்.

பலராமா வசனம

இப்படியாக பலராமர் திரியோதிரனை இகழ்ந்து பேசிவிட்டு திருதராகூஷ்தனைப்பார்த்து சொல்லுகிறவிதங்காண்க.

பலராமா வசனம

மேகாஇதஎன்ன மோசம்
உனக்குசரணம் வெகுநேசம்
ஆகாதகாரியம் மகன்செய்யலாகுமோ
அறியாதபாலனை சிறைவைக்ககூடுமோ மேகா

திருதராகூஷ்தன் தரு தர்க்கம்

ராமாஎன்குலம் கெட்டுப்போச்சே
யிப்போநாங்கள் தலைகுனியலாச்சே
ஏமாந்திருப்போமென்று வந்தாயேகடைக்கெட்டு
இனிமேலுங்களுறவு போனாலும்போகட்டு ராமா

பலராமர் தரு

பொல்லாதவன் எந்தன்தம்பிகோபம்
பொருந்தான் சொல்

தம்பிசொல்லாலும் சொன்னேனே
மகனுக்குவெகுபுத்தி நல்லாது
நாரவென்றான் வந்தேன்
அதையைப்பத்தி பொல்லாதவ

### திருதராக்ஷ்தன் தரு

மாயாவினோதன்வந்தாலும் வல்லமையுதவியால்மேலும்
ஆயரெல்லாங்கூடி தடிக்கொண்டடித்தாலும்
அதற்கஞ்சி சிறைவிடமாட்டேன்
ஒருகாலும் மாமா

### பலராமர் விருத்தம்

இட்டமிதுயேசாம விதையுரைக்க
ஏற்காமல்இருபாம்பை யடைந்திருக்க
துஷ்டருக்குசிஷ்டைபரிபா லினமாம்பெரிதேயாகும்
துரிதமுடன்தம்பியுடன் தானடந்து
பக்ஷமுடன்படையெடுத்து வாட்டாவிட்டால்
பாறசிறைமகனைவிட மாட்டானப்பா
கஷ்டமதுவந்தடைய கவுறவர்க்கு
காலமிதுஉன்கருத்தை சொல்லுவாயே.

### பலராமா வசனம

கேளும் தம்பி கிருஷ்ணமூர்த்தியே உனது இஷ்டவினோத மாகாதென்று அனேகவிதமான நன்மையான வசனங்களை எடுத்துச் சொல்லியும் கேளாகவுறவர்க்கு துஷ்டனுக்கு சிஷ்டைபரிபாலினமென்பது போலே திரும்பிவந்துவிட்டேன் அது துரியோதனனுக்கு என்ன பொல்லாத காலமோதெரியாது நல்லவசனங்கள் சொல்லியும் கேளாமல் மகனை சிறை விடமாட்டேனென்று பிடிவாதம் செய்துவிட்டான் இனி உன் கருத்துபோலவே தம்பி கிருஷ்ணமூர்த்தியே.

### கிருஷ்ணன் விருத்தம்


கண்டுமொழிதமயனுமே கூறக்கேட்டு
காலருத்திரனைப்போல் கண்சிவந்து
கண்டுடனே சிலைவாளும் சூலமேந்தி
சதுரங்கப்படையுடனே ரததிலேறி
கொண்டலிடிபோலே முறசுபேரியாட
குருகுலத்தைஇன்றோடே அழிப்பேனென்று
சண்டைசெய்ய அஸ்தினாபுரியைநாடி
தமயனுடன்சமர்புரிய வருகின்றானே.

### கிருஷ்ணன் சண்டைக்குப் போகிற தரு

சண்டைக்குநடப்போம் வாருங்கள்
நல்ரதகஜதுரகபதாதிக ளுடனே சண்டை
சண்டைக்குநடப்போம்வாரும் தனியுக்கிறசேனைமன்னர்
அண்டரண்டந் தானடுங்க
அதிரவே முரசுபேரி
முடுக்கு-அரிய துரியபதியவன் மனதுந்துடிக்கத்தெரிய
அரசர்வந்துவிருதுகள் பிடிக்க சண்டை

அஸ்தினாபுரியை யழிப்பேன்நல்ல
அதிவிதமாகிய கதிரொளிமணிமுடி
அரவக்கொடியை அறுப்பேன்
கஸ்தியடையமர் கலங்கிப்பயந்தோடவே
அஸ்திரமதனைப் பூட்டி
அரிந்துநாமுமே சாட
முடுக்கு-அண்டரண்ட நவகண்டம்நடுங்கவே
எண்டிசைராசரும கண்டுமேவணங்க சண்டை

சித்திரரதத்திலேற்றியே நல்லதிடமுடன்
படைகளை அடவடவாக
ஜெயம்ஜெயமென்று கூறியே
சுற்றிலும் அணியணியா துரைகள்மகிழ்ந்துநாட
சத்தியவாசகதேவர் தவமுனிவோர்க்கொண்டாட
முடுக்கு-தாரசின்னமுடன் பூரிபேரிகை
ஆரவாரமுடன் வீரியமீறி சண்டை



### சூரியன் தரு சண்டைக்கு பயணம்

அண்ணா சகுனிமாமா வாரும் இந்த
அமர்களந்தன்னிலே என்வீரம்பாரும்
அண்ணுபடைத்தன்னை கூட்டும் இந்த
நமனுநடுநடுங்க சண்டாளவைநாட்டும்
ரணபேரிஜெயபேரி மீட்டும் இந்த
நானிலமறியவே என்வீரம்காட்டும்
இணையில்லாவீரர் வாட்டநம்மை
இந்திரதேவரும் கண்டுகொண்டாட
நவரத்தினரதத்தின் மேலேறி
ராஜராஜரெல்லாம் வந்திடமீறி
புவனத்தில் திவ்யரென்னை நல்லபொன்முடி
பூஷணந்தக தகவென்ன
வெண்ணைத்திருடுங் கிஷ்டனைக்கண்டு
வீரியமரிந்திட வேணுமேயின்று
பெண்ணைத்திருடுங் கள்ளனுச்சே இப்போ
பிலங்கொண்டு சமருக்கு
வந்திடலாச்சே அண்ணு

### சூரியோதிரன் விருத்தம்

அருந்தவபயத்தால்வந்த அழகுள்ளமகளும்வாடி
வருந்தியேநோகச்செய்த மகனுக்குசேனைசூழ
பரிந்துமேவந்து உந்தன் பலமதையறியவேண்டி
தெரிந்திட எனதுகையில் சிறையினை எடுத்திட்டானே.

### வசனம்

கேளும் யாதவகிருஷ்ண எனது தவப்புத்திரியான லக்ஷ்மண தேவியைவாடி தனிக்கும்படி பங்கம்செய்ய உன்மகனுக்கு யறிந்து வந்தமையால் உன்சமர்த்தை அறியவேண்டியபடியால் என்கை யில் தனுவெடுத்தேன் எதிர்த்து நில்லடா கிருஷ்ண.

### கிருஷ்ணனுக்கும் சூரியனுக்கும் சண்டை

### கிருஷ்ணன் தரு

துஷ்டனே உன்னிட கெருவத்தையடக்குவேன்
துடுக்காபேசாதே வெகுமுடுக்காவீசாதே
துறகபதாதியை அதமதுசெய்வேன்
துணிந்து வில்லெடுத்தேன் சூரியா

### சூரியன் தரு

எடுத்தேன் அஸ்திரம எமகிரிடுங்க
எளிதமாசாது சும்மாவாலிதம்யோகாது
எங்கும் நிறைந்திட பாணமெடுத்தேன்
இதுவிதியோ கிருஷ்ண மடிய இதுவிதியோ எடுத்தேன்

கிருஷ்ணன் தரு

மடித்தபடைகளை மறலிக்கிரையாய்
மதமதையொழிப்பேனே வந்தவிதமதையொழிப்பேன்
மாறுவீரியம் பேசவும் வுந்தன்வல்லமையறியேனே
தூரியாவல்லமை யறியேனே தூரியா மடிந்த

தூரியன் தரு

வல்லமையுண்டு மாடுகள் மேய்க்கும்
மதியாமல் பேசாதே வெகுதூரிதாய் வீசாதே
மண்டலாதிபதியாகிய எந்தன்வல்லமையறியாயோ
கிருஷ்ணவல்லமையறியாயோ கிருஷ்ண வல்லமை

கிருஷ்ணன் தரு சண்டை

அரியுமடங்கிய யானைக்கஞ்சுமோ
அடாவேறன்தீறுநல்ல செம்மடகுலதீராய்
அதலசுதலபட அஸ்திரமெடுத்தேன்
அரியோசேதி தூரியாதெரியாயேவிவரம் அறியு

தூரியன் தரு

சேதிகளொன்றும் தெரிந்திடாமலே
தீறம்கொண்டாலே வெகுசூரம்கொண்டாலே
செயம்பெறுமல்பயந்திடுவேனே சித்துவித்தைகாட்டாதே
நீசித்துவித்தை காட்டாதே சேதிக

கிருஷ்ணனு தரு

காட்டியமோகன அஸ்திரமெடுத்தேன்
கண்டுமே ஓடாதே பயங்கண்டுமே வாடாதே
கணக்கில்லாமல் பாணம்வருகுது
கவுறவனேபாரும் தூரியாகவுறனேபாரும் காட்டிய

தூரியன் தரு

பாருமென்னிடசவுரியதீரம் பாணமெடுத்தேன்
பயந்தோடவிடுத்தானே பம்பரம்போலே
ஆடிய உங்களைப்பறக்க அடிப்பேன்
கிருஷ்ணபறக்க அடிப்பேனே பாருமென்

கிருஷ்ணன் விருத்தம்

பூதகிகடகாசூரன் பாவிகஞ்சாரிஷபாசூரன்
தீதக அரிஷ்டாசூரன் தேனுகண்பவுண்டாசூரன்
சாத்தகமில்லாகஞ்சன் தனையெல்லாம்படித்தே எந்தன்
தேதிகளறிந்திருந்தும் தீறங்கொண்டறிகிலேனே.

வசனம்

கேளும் திரியோதன நான்சிறுகுழந்தையா இருக்கும் காலத்தில் கஞ்சன் என்னைக்கொல்லும்படியாய் அனுப்பிவைத்த பூதகி கடகாசூரன் ரிஷபாசூரன் தேனுகண்டபவுண்டன் முதலானவரையும்மடித்து நல்லம்மானாகிய கஞ்சனையும் மடித்து என்னைப்போல ரூபம்கொண்டுவந்த பவுண்டிகனையும்மடித்து இதுகளெவ்லாம் அறி

ந்திருந்தும் என்பேரில் எதுத்து வந்தது இன்னதென்று அறிகி லேன் துரியோதனா.

துரியன் சண்டை தரு

வெண்ணைத்திருடி என்றுகண்டேனே
இதோவில்லைவாங்கி சரம்கொண்டானே
பெண்ணை திருடவந்த பிள்ளையைவிடுவேனோ
பிரட்டுக்குமுரட்டுக்கும் நான்விசனப்படுவனோ
பேயனேவந்த ஆயனே சற்றுஞாயமறியாமல்
மாயனே வீசுறாய் வெண்ணை

கிருஷ்ணன் தரு சண்டை

கெட்டிக்காரதனம் சொல்லவோ
மெத்தகெட்டிமெத்தவீரியம் வெல்லவோ
வெட்டிகெலிக்காமல் விடுவேனோ
உங்களைவிமலவன் வந்தெதிர்த்தாலும்
வெய்வானோ உந்தனை
வெரியனேகெட்ட துரியனே உந்தன்
பெரியதனங்க ளெல்லாம்
தெரியும் தெரியும் வாடா கெட்டிக்

துரியன் தரு

மருடத்துரைகளென்று கண்டுமே
மெத்தமதிகெட்ட சவுரியம்கொண்டுமே
பகடியெய்யவேண்டி படைக்கூட்டிவந்தாயோ
பாலனைசிறைவைக்க மனம்மெத்தநொந்தாயோ
பதறவேசேனை சிதறவேமிக்க
உதிரம்பூமி அதிரக் கணைத்தேடுத்தேன் மருடத்து

கிருஷ்ணன் தரு

தேவரேடுங்க சரம்தொட்டேனே
உந்தன்சேனைசிதரியோட விட்டேனே
தாவும்பரியும் சாரதியுமாக
சல்லடைக்கண்போலே துளைத்தேனே
மனம்நோகவே சாடவே எல்லாம் ஓடவே
நீயும்வாடவேநான்வகைதேடாமல் விடுவேனோ தேவரேடு

துரியன் - கந்தார்த்தம்

சரமதுவிட்டபோது சராசரபுவிகளஞ்ச
திரமதுகொண்டுமீறி சேனையும்தத்தளிக்க
உறமதுகாணநாங்கள் ஒருமிக்கசரங்கள்பூட்டி.
பரமனுமதிசயிக்க

தரு

பஞ்சுபஞ்சாக வடிப்போம்
சேனைகளெல்லா மிஞ்சியே
விழவே இடிப்போம் பஞ்சாயுதனே

நீயும்பார்த்து நடுநடுங்கி
மிஞ்சாமல் அடங்கிட மீதுசரம்தொடுத்தேன் பஞ்சு

கிருஷ்ணன் கந்தார்த்தம்

எடுக்கவேசரங்கள்மீறி இவர்கள்சம்மந்தியென்று
ஒருக்கமாய் இருக்கக்கண்டு ஒங்கியேசரங்கள்பூட்டி
விடுக்கவே இவர்கள் தன்னை.வெல்லவேமனதிலெண்ணி
கடுக்கெனகோபமீறி

தரு

சக்கரம்தனை யெடுத்தேன்
மருகனென்று மிக்கவேயறவிடுத்தேன்
திக்குதிசைநடுங்க தேவர்கண்டு ஒடுங்க
உக்கிரகோப முடனே யோங்கிவிடுத்திடவே சக்கரம்

பலராமர் விருத்தம்

சக்கரத்தைமாயவனும் எடுக்கும்போது
தடுத்திடவேவேணுமென்று பலராமர்தானும்
அக்கரையாயோடிவந்து முன்னாலேநின்று
அப்பனேபதராதே என்றுசொல்லி
தக்கப்பலமுள்ளவனோ துரியராசன
சரியானோநமக்கெதிரி யவனோதான்
பக்குவமாகேளென்று பிரியவார்த்தை
பகருவார்பலராமர் பகருவாரே.

பலராமர் வசனம்

இவ்விதமாக கிருஷ்ணமூர்த்தி சக்கரத்தை யெடுக்கும்போது பலராமர் தடுத்து சொல்லுகிற விதங்காண்க.

பலராமர் தரு

பதறாதேபதறாதே கரியமேனியனே
நீபதறாதே பதறாதே
எதிரிகள் இவர்கள்தானோ என்னையித்தியம்நில்லும்
உதவாது துரியன வீணாகாமல்
முடுக்கு - விந்தையாகிய நந்தகோவிந்தன்

துரியன் தரு

மடிந்தாலும் இவர்களாலே மடிவேனோ
சொல்தவரினாலும் விடுவேனோ
கடிந்தாலுமிவர்க்கஞ்சி கதிர்முடி தாழ்வுண்டோ
இடித்தாலும் இந்த அண்டம்
எனக்குண் டாமோ
முடுக்கு - எப்படி தம்பியே செப்பியேபெரிதா
இப்படிசொல்லவும் போமோநாங்கள் மடிந்தா

பலராமர் தரு

பெண்ணுலே வெகுபேர்கள்
குலமழிந் திருக்கிறார்
எண்ணமல்வெகுவீரம் யெடுத்துபேச
உமக்குநண்ணு இருக்கவில்லை ரூசதன்மையிதுவோ
முடுக்கு – நல்லயென்னிட செல்வனே
மதியேவல்லமை ஒருமொழி
சொல்லாதே சொல்லும் பெண்ணு

சூரியன் வேறு தரு

விடமாட்டேன் விடமாட்டேன்
ஏதுசொன்னலும் பத்திரன்தன்னை விடமாட்டேன்
திடமாக நீங்கள் என்னை
செய்யாதெல்லாம் செய்யுங்கோள்
படகலமாறுக்கோ பார்க்கலாம் இதுவேளை
முடுக்கு - பாசமாகவந்துமே பக்ஷமும்மாமா
கூசவுமில்லையே தேசமும்மறிய விடமாட்டேன்

பலராமர் விருத்தம்

எங்களிடதன்மைதன்னை யோசிக்காமல்
எடுத்துரைத்தவார்த்தையெல்லாம் மிகழ்ந்துவிட்டாய்
திங்கள்குலவீரியனை கொண்டோமிப்போ
சீருன அஸ்தினு புரியைதூக்கி
கெங்கையிலேகாய்ந்திடுவேன் பாருமென்று
கடுகடுத்துபூமியெங்கும் அதிரத்தாண்டி
அங்கமெலாம்துடிதுடிக்க தென்பாலோடி
ஆயுதத்தைபூமியிலே நாட்டினுரே.

வசனம்

இவ்விதமாக பலராமர் சூரியோதனனுக்கு பலவாராக சாம்புவதேவனை சிறைவிடச்சொல்ல அவனும் விடமாட்டேனென்று சொல்ல அப்போது பலராமருக்கு கோபம் பிரவேசித்து தன்கையில் இருக்கின்றகலப்பை ஆயுதத்தை எடுத்து பட்டணத்திற்கு தென்பாரிசமாய் நாட்டி சொல்லுகிறவிதங்காண்க.

அஸ்தினுபுரியை யடியோடெழுப்பி
ஆட்டித்தூக்கினேன் ஆலாயுதம்
நாட்டித்தூக்கினேன் மடமடென்று
கிளப்பினத்தை மாய்த்துவிடுவேனே
கெங்கையில் சாய்த்துவிடுவேனே
கொலுவைநாட்டி ஆட்டிநகரை
குலுங்கியோடவே சனங்களும்கலங்கியோடவே

குய்யோமுறையோவென்று கூச்சலிட்டாரே
சனங்கள்பாச்சலிட் டாரே

தொகையறா

திடுக்கிட்டுசனங்களெல்லாம் தென்புறநகரமிக்க
நெக்கிட்டுகிளம்பும்போது நெடியமாளிகையும்சாய்ந்து
மக்கிடபோதுமன்னன் பலராமர்பாதம்வீழ
இக்கிட்டைதீருமென்று எல்லோருந்துதிக்கின்றாரே.

சூரியன் தரு

ஆதிமாயா அரிமுகுந்தா என்னசெய்குவோம்
அபயமுந்தன்திருவடிக்கு அய்யாவந்தனம்
வேதனையைத்தந்தீரே விமலநாதனே
மெய்யர்பலராமசுவாமி அய்யாவந்தனம்

காட்டிகொழுகை மாட்டி
நீரேநகர மழிக்கவே
நல்லதல்லவே கோபம்ரக்ஷித்தாளுவாய்
கோட்டைகொத் தளமெல்லாம்
குலுங்கியாடுதே குற்றம்பொருத்து ஆண்டருள்வாய்
கோடி வந்தனம்

சொன்னபுத்தி கேளடாமூடா
பாவிநாங்களே சோருதையோ
எங்களாகுவிகாகு மையனே
என்னகுற்றம் செய்தபோதிலும்
இந்தவேளையில் எண்ணலாமோ

தன்மகிமை யாறறிகுவார்
அலையுதையோ சனங்களெல்லாம்
நீலநாயகா ஆதரித்து ஆளுமையா
அழியாது இந்தகீர்த்தி
கலகலத்துமேபட்டணம் கவிழ்ந்துபோகாதே
காரும்கிருபைப்பாரும் யேழைமீதில்

பலராமர் விருத்தம்

அரிமுகுந்தாவென்று அனைவரும்சிரசின்மீதில்
கரமதுகூப்பிவந்த கவுறவர்பிழைபொறுத்தோம்
திறமதுகீர்த்தியோங்கி தென்புறம்உயரவிட்டேன்
வரமதுதந்தேன்வாழ்க மைந்தனையழைத்திடாயே.

வசனம்

வாரும்பிள்ளாய் கெவுறவர்களே நீங்கள் சிரசின்மீது கரங்குவித்து துதித்தபோதே கோபமாறி இரக்ஷித்தோம் இந்த கீர்த்தி

எப்போதும் அழியாது அஸ்தினாபுரி தென்பாரிசம் உயர்ந்துபோகும்படி நாட்டினேன் குமாரனை யழைத்துவாரும் துரியோதனா.

குடிகள் விருத்தம்

அஸ்தினாபுரியிப்போது அடியோடேகவிழ்ந்துபோகும்
கஸ்திகளடைந்தால்நீயும் காருத்தன்புதல்வன்றன்னை
விஸ்தாரமாஎண்ணமல் விட்டிடுவாயிப்போது
அஸ்தியாயிருக்கவேண்டாம் அருகினிலழைத்திடாயே.

வசனம்

கேளும் துரியோதனமகாராஜனே ஸ்ரீ பகவானுடைய பிள்ளையை சிறையிட்டபடியினாலே நமது பட்டணத்திற்கு கெடுதி நேரிட்டது சாம்புதேவனை அழைத்துக்கொண்டுவாரும் மகாராஜனே.

குடிகள் தரு

விட்டுவிடுஞ்சிறையை ராஜனே
விட்டுவிடும் சிறையை
விட்டுவிடுமிதனால் நஷ்டம்வரும்
நமக்குபொட்டான தோடிவந்து
திட்டமாயுரை செய்தோம் விட்டு

பிடிவாதங்கள்சொன்னால் பிழைவந்துநேர்ந்திடும
விடுவாய்சாம்புவன் தன்னை வண்பழிநேர்ந்திடும்
ஆண்பிள்ளைக்கழகாக தாமிஷம்செய்யாமல்
சனுதியா விடுவாய் விட்டு

அபகீர்த்திக்கிடமாகும் அரசரெல்லாமநகைப்பார்
விபரீதம்வருமுன்னே விடுவாய்சாம்புவன் தன்னை
வேந்தனைசொல்லது சாந்தகமென்றுமே
மான் ஆவிர் மகனையும் மரிக்காமல்விடுகுவாய் விட்டு

வசனம்

கேளும் திரியோதனமகாராஜனே ஸ்ரீ கிருஷ்ணபகவானுடைய பிள்ளையை சிறையிட்டபடியினாலே நமது பட்டணத்திற்கு கெடுதியுண்டாய்விட்டது உனது குமாரததியும் பாதகாணிக்கையாக வைத்து சாமபுவதேவனை சிறைவிடும் திரியோதனா.

சூரியன் வசனம்

அப்படியே உங்கள்மனதுபோலவே நடத்திக்கொள் குடிகளே.

பொது வசனம

இந்தப்பிரகாரமாக சாம்புவதேவனை சிறைவிடுத்து லக்ஷ்மணதேவியுடன் இருவரும் கொலுவுக்கு வருகிறவிதங்காண்க.



விருத்தம்

உலகமெங்கும்மதிசெயிக்க யுகநதுமேசிறைபற்றி
பலபலமணிகள்பூண்டு பாங்கியர் அலங்கரிக்க
கலைகலென்றதிரதண்டை சாமசுந்தரனுமெச்ச
நலமிகுசாம்புவதேவன் லக்ஷ்மணாதேவிவருகின்றுளே.

தரு

மதிகுலத்துரியன்செல்வி — மாயன்மைந்தன்
சாம்புவதேவன் — எதிரில்ரதிமன்மதனைபபோலவே
இருவரும் — வநதாா
சித்திரபணிகளெல்லாம் — திரேகமெங்கும்
தான்மறைக்க — எத்திசையும்தான்நடுங்க
இருவரும் — வந்தார்
கந்தமலர்மாமணிகள் — காந்தியும்பளபளென்ன
சந்தனசவ்வாதுபூசி — சம்பிரமாய்வந்தார்
மன்னமன்னர்கன்னியர்கள் — மின்னலொளிவாசோந்தி
மேனிப்பிரகாசம்போலவே — விளங்கவேவந்தார்

துரியோதிரன் விருத்தம்

உன்னிடமானதேவா உரியமைந்தனையும்விட்டு
தன்னகரில்லாஎந்தன் தவத்திருல்வந்துதித்தகன்னி
என்மகளையானும் காணிக்கையாகவைதேதன
இன்னமும்பரிதேருனையிதை எல்லாங்கைகொள்வீரே.

வசனம்

கேளும் தேவாதிதேவனே தாங்கள் குமாரனையும் விடுத்தேன்
எனது குமாரத்தியை பாதக்காணிக்கையாகவும் லக்ஷம் யானை

லக்ஷம் குதிரை லக்ஷம்தேர் பதினாயிரம் தோழிப்பெண்கள் இதுக ளெல்லாம் கைக்கொள்ளும் நமஸ்காரஞ்செய்தேன் கர்த்தனே.

கிருஷ்ணன் தரு தர்க்கம்

எடையருக்கானசேனை யேதுக்குபோகச்சொல்லும்
மடமயில்உந்தன்மகள்வரலாமோ எங்கள்பின்னே
முடுக்கு-மதிகுலமாளும் துரியனேகேளும்
ஜெகதலமறியவே உன்மகள்வேண்டாம் எடை

துரியன் தரு

மாமாசம்மந்திமுறைவரிசை தப்பிஉன்னை
வாயினால்பரியாசவார்த்தை சொன்னேன்
முடுக்கு-மாதவனேநீகூளைதஎண்ணாதே பாதமே
பணிந்தேன்நாதனே பாரும் மாமா

கிருஷ்ணன் தரு

எட்டிப்பார்த்தால் குடுமிஎட்டாவிட்டால்காலை
அட்டியில்லாமல்பிடிப்பாய் அரவத்துவசாநீயும்
முடுக்கு-ஆண்பிள்ளைஎன்றமே வீம்புகள்பேசியே
வீண்பழிநேர்ந்திட தீம்புகள்செய்தாய் எட்டி

துரியன் தரு

சீதாராமாதவாசெய்த பிழைபொருத்தும்தேவனே
எங்கள்மேலேபிரியம்வைத்து ரக்ஷிப்பாய்
முடுக்கு-பேதகமாகதேவனே நீரும்
சாதனைசெய்வது ஞாயமுமல்லவே சீதாராமா

கிருஷ்ணன் விருத்தம்

எப்படிக்கியுரைத்தாலும் துரியபூபா
என்மகனுக்குன்மகள்மேல் இச்சையில்லை
தப்பிதமென்றெண்ணாமல் உந்தன்பெண்ணை
சரியொத்தராஜனுக்கு மணமேசெய்து
ஒப்புறவாய்காத்திருந்து சுதனைக்கூட்டி.
ஊருக்குப்போக விடைதருகுவீரே.

வசனம்

கேளும் திரியோதனா நீர் என்னசொன்னபோதிலும் உன்னு டைய குமாரத்தி எங்கள் குலத்திற்கு யோக்கியமில்லை உன்னைப் போலே சரியொத்த ராஜனுக்கு மணஞ்செய்து சந்தோஷமாய் வாழ்ந்திருங்கோள் நான்போய் வருகிறேன் விடையளித்து அனுப் பும் திரியோதனா.

துரியன் தரு

உந்தன்மகன் தொட்டபெண்ணை
எந்தராஜர் கொள்வார்
ஓதுவீர்நன்று யோதுவீர் உந்தன்

கிருஷ்ணன் தரு

எந்தன்மகன் உன்மகளை
செய்ததென்ன எந்தனுக்கு சொல்லுவாய்
நீயும்சொல்லு வாய் எந்தன்

தூரியன் தரு

சிறையெடுத்து தேரிலேற்றி
சேனதூரம் போய்விட்டானே
தேவரே கிருஷ்ணதேவரே சிறையெடு

கிருஷ்ணன் தரு

தேரிலேற்றி போகையிலே
செய்ததென்ன உன்மகளைசெப்புவாய்
நீயும்செப்பு வாய் தேரிலே

தூரியன் தரு

செய்துவிட்டானென்று மில்லை
தேசமெங்கும் தானறிந்து
போச்சுதே தெரிந்துபோச்சுதே செய்

கிருஷ்ணன் தரு

போனவழியை விடாமல்
ஆணவமாய் சிறையிட்டாய்
அடித்தாயே சிறையடைத்தாயே போன

தூரியன் தரு

தெரியாமற் செய்தபிழை
தேவரீர்பொறுத்தருள வேணும்
காக்க வேணுமே தெரியா

பலராமர் விருத்தம்

மாயவனும்சம்மதிக்க மாட்டேனென்று
வம்புசெய்யும்போது பலராமர்கண்டு
நீதநல்லதூரியனுமே தம்பிகேளும்
மிகவாதுபோதும்
மரியாதையல்லையவன் மகளைத்தள்ள
வேதங்கள்முழங்கிட சாம்புவனுக்கு
விவாகமதுதானடத்த வருகுவாயே.

வசனம்

கேளும் தம்பி அந்த தூரியோதனன் அப்படிக்குத் தெரிந்தவனல்ல ஒருவர் புத்தியை கேழ்க்கிறவனுமல்ல அதினாலே யவனுக்கு வந்தபங்கம்போதும் இனிமேல் வந்தகோபத்தை மாற்றி சாம்புவதேவனுக்கு விவாகம் நடத்தும்வழி தேடவேண்டும் இருவரையும் தேரிலேற்றிக்கொண்டு நடப்போம் கிருஷ்ணமூர்த்தியே.

பொது வசனம்

இந்தப்பிரகாரமாக லக்ஷ்மணாதேவியும் சாம்புவதேவனையும் ரதத்திலேற்றிக்கொண்டு துவாரகாபுரி நடக்கிற விதங்காண்க.

கிருஷ்ணன் தரு

நடந்தார்பாரீர் துவாரகைக்கு
நடந்தார்பாரீர் நடந்தார்

அஸ்தினாபுரம் நகரந்தனைக்கடந்து
அடர்ந்த மலையும்நாடும்
ஆறுநதி கடந்து நடந்தார்
சாம்புவதிருமாரன் தன்னை
ரதத்திலேற்றி வீம்புபேசியே
துரியன்மெல்லி மகளும்கூட நடந்தார்

நாகசின்னமுறசுட வல்லபம்பைபேரிகை
ஏகமாய்முழங்கிட எல்லோருமாகவே
நால்வகைசேனையும் ராசர்களும்விழ
ஆலவட்டங்கள்வீச அணியணியாகவே நடந்தார்

பொது வசனம்

இந்தப்பிரகாரமாக சாம்புவதேவனையும் லக்ஷ்மணா தேவியும் சகல ராஜவர்க்கத்துடனே துவாரகாபுரிக்கு வந்து நல்லசுபமுகூர்த் தத்தில் இருவருக்கும் முகூர்த்தம்செய்து வந்த ராசர்களுக்கு விருந்து முதலானதும் நடத்திவிட்டு அவாளவாள் இருப்பிடம் போய்சேர விடைகொடுத்து அனுப்பிவிட்டு இருவரும் சுகமாக வாழ்ந்திருந்தார்களையா சுவாமி.

## வாழி விருத்தம்

அருமறையோர்தான்வாழி அரசர்கள்வாசிப்போர்வாழி
தெய்வமகள்விலாச அச்சுக்கூடம்வாழிதரணிவாழ சற்குருவாழி
சதுர்மறைமுனிவர்வாழி மருவுவானமேகமாருமழைபொழிந்
தோங்கவாழிதுருபதன்மகள் பாஞ்சாலிசூழசபைவாழிதானே.

இந்தக்கதையை படித்தோர்களும் ஆடினோர்களும் கேட்டோர் களும் எழுதினோர்களும் சாலோக சாமீப சாயுச்சிய நாலாம் பதவி யை யடையக்கடவது. சுபம்! சுபம்!!

மங்களம் சுபமங்களம் மங்களம் ஜெயமங்களம்.

இலக்ஷ்மணாதேவி மாலையிடு நாடகம்
முற்றிற்று.

pa.r Issue Card No. Q. H. ... S. 259 (9-5-50) 1000 Cps.